சாட்சிகள் வாக்குமூலம்
பாகம் 111 சுற்றறிக்கை உத்தரவு 2(11) உவிமுச பிரிவு 1 மற்றும் 2
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.
அ.வ.எண். 97 /2024

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : வெள்ளையம்மாள் (வா.சா.–1) | தொழில் | : |
| த/பெ., க/பெ. | : முருகன் | வயது | : 44 |
| கிராமம் | : சித்தரேவு | இனம் | : பெண் |
| தாலுகா | : பழனி | நாள் | : 14.03.2025 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

1973 ஆம் வருடத்திய வரைமுறைச் சட்டம் பிரிவு 10 ன்படி சாட்சி அழைக்கப்பட்டு அங்ஙனமே உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு 2025 ம் ஆண்டு மார்ச் மாதம் 14 ஆம் நாள் அளித்த சாட்சியம்.

வாதி தரப்பு முதல் விசாரணை:

நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை சத்தியப்பிரமான நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். பிரமான வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் என்னால் சொல்லப்பட்டவை தான். அவை எனக்கு நன்றாக தெரியும். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அனுபந்தம் பட்டா அசல் வா.சா.ஆ.1 ஆகவும், சிட்டா அசல் வா.சா.ஆ.2 ஆகவும், வீட்டுவரி ரசீது அசல் வா.சா.ஆ.3 ஆகவும், அடங்கல் பதிவேடு அசல் வா.சா.ஆ.4 ஆகவும், கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய சான்று அசல் வா.சா.ஆ.5 ஆகவும், ஆதார் அட்டை நகல் வா.சா.ஆ.6 ஆகவும், வீடு கட்டுவதற்கான உத்தரவாணை அசல் வா.சா.ஆ. 7 ஆகவும், புகார் மனு ஏற்பு ரசீது வா.சா.ஆ.8 ஆகவும் குறியீடு செய்யப்படுகின்றன. மேற்படி சாட்சியத்தையும், சான்றாவணங்களையும் ஏற்று நான் வழக்கில் கோரிய பரிகாரங்களை வழங்கி உத்தரவிட வேண்டுகிறேன்.

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :

(பிரதிவாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணைக்காக வழக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

ஒம்/– S.கபாலீஸ்வரன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பழனி